**செய்தி வெளியீடு எண்: 507** **நாள்: 08.03.2024**

**மன்னார் வளைகுடா மற்றும் பால்க் ஜலசந்தியை பாதுகாக்க இந்தியாவின் முதல் கடல்சார் உயர் இலக்கு படையை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது**

இந்தியாவிலேயே முதன்முறையாக, மன்னார் வளைகுடா மற்றும் பால்க் ஜலசந்தியில் உள்ள கடல் வளங்கள் மற்றும் கடல் பல்லுயிர்களைப் பாதுகாக்க இந்தியாவின் முதல் கடல்சார் உயர் இலக்கு படை இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க விழா சென்னை தலைமைச் செயலகத்தில் காணொளிக் காட்சி மூலம் நடைபெற்றது. திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் "இந்த கடல்சார் உயர் இலக்கு படை பவளப்பாறைகள், கடல் புல், பிற கடல் தாவரங்கள் மற்றும் கடல் உயிரினங்கள் போன்ற மதிப்புமிக்க கடல் பல்லுயிர்களின் பாதுகாப்பில் ஒரு புதிய அத்தியாயம் உருவாவதற்கான தொடக்கமாக அமையும்" என்றார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு அவர்கள் இந்நிகழ்வு பற்றிக் குறிப்பிடுகையில், "கடல் பல்லுயிர் பெருக்கத்தை பிரத்தியேகமாக கையாள்வதற்கான நீலப் படையை (Blue cadre) உருவாக்க இத்தனித்துவமான முயற்சி உதவியாக இருக்குமென்றும் கடல் மற்றும் கடலோர சூழலியலை சிறப்பான முறையில் பாதுகாக்க இந்த உயர் இலக்கு படை தமிழ்நாடு வனத்துறையின் திறனை அதிகரிக்க உறுதுணையாக அமையுமென தெரிவித்தார். தமிழ்நாடு அரசு 2022 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது, கடல்சார் உயர் இலக்கு படை அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டது. இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, கடல்சார் உயர் இலக்கு படையை அமைக்க ரூ. 109.65 லட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. குறிப்பாக மன்னார் வளைகுடா மற்றும் பால்க் ஜலசந்தியில் கடல்சார் வன உயிரினக் குற்றங்களான கடல்வாழ் உயிரினங்களை கடத்தல் மற்றும் வேட்டையாடுதலை தடுக்கும் பொருட்டு இரண்டு அலகுகள் கொண்ட கடல்சார் உயர் இலக்கு படை இராமநாதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கடல்சார் உயர் இலக்கு படையில் உள்ளூர் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த 12 கடல்சார் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆழ்கடல் நீச்சல் பயிற்சி, ஸ்நோர்கெலிங் உள்ளிட்ட கடல் ரோந்து தொடர்பான விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு இந்திய கடலோரக் காவல்படை,

கடற்படை மற்றும் கடலோர காவல் ஆகிய சிறப்புப் படைகள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடல்சார் உயர் இலக்கு படையானது கம்பியில்லாத் தகவல் தொடர்புடன் கூடிய இரண்டு ஆழ்கடல் படகுகளுடன் செயல்படுகிறது. இப்படை கடந்த ஏப்ரல் 2023 முதல் பல்வேறு முன்னோட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இக்காலகட்டத்தில், 25 சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டறிந்து 4133 கிலோ சட்டவிரோத வன உயிரினப் பொருட்களை கைப்பற்றியுள்ளது.

இந்த கடல்சார் உயர் இலக்கு படை விழிப்புடன் கூடிய ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு கடல் பகுதியின் பாதுகாப்பு மற்றும் நிலையான நிர்வாகத்தை வலுப்படுத்தவும், தகவல்களை சேகரித்து பரப்பவும், திறனை உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தின் கடலோர மண்டலங்கள் வளமான சுற்றுச்சூழல் அமைப்புகளின் இருப்பிடத்தைக் கொண்டுள்ளதால் இவை அதிக உணர்திறன் கொண்ட உயிர்கோள மையமாகவும், நாட்டிலேயே பல்லுயிர் பெருக்கத்தின் இருப்பிடமாகவும் பவளப்பாறைகள், மண் அடுக்குகள், உப்பு அடுக்குகள், மற்றும் சதுப்பு நிலங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் இப்பகுதிகள் மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட வேண்டியவை ஆகும். இப்பகுதிகளில் சட்டவிரோத வன உயிரினக் கடத்தலை எதிர்ப்பதில் கடல்சார் உயர் இலக்கு படை முக்கியப் பங்கு வகிக்கும்.

இந்நிகழ்வின்போது, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), திரு.சுப்ரத் மொஹபத்ரா, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் திரு.ஸ்ரீனிவாஸ் ஆர் ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனஉயிரினம்), டாக்டர். வி. நாகநாதன் மற்றும் இராமநாதபுரம் வன உயிரினக் காப்பாளர், திரு. பகான் ஜகதீஷ் சுதாகர் ஆகியோர் உடன் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in